**சுருக்கம்**

பணிக்குழு – ஆலந்துார் நகராட்சி – பொறியியல் பிரிவு – குடிநீர் பணியாளர்கள் – முன்தேதியிட்டு பணிவரன்முறை, ஊதிய ஊயர்வு மற்றும் பணப்பலன் அளித்தல் – நீதிப் பேராணை மேல்முறையீட்டு எண்.14/2010 மீது சென்னை உயர்நீதிமன்றம் அளித்த 11.01.2010 தீர்ப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதியளித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3)துறை**

**அரசாணை(ப) எண். 181** **நாள் 19.04.2010**

**படிக்கப்பட்டது**

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.29342/ 2009/எப்3, நாள் 12.3.2010.

*****

**ஆணை:-**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் கோரியுள்ளபடி, ஆலந்துார் நகராட்சி ஆணையரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு எண்.14/2010–ன்மீது, சென்னை உயர்நீதிமன்றம் 11.01.2010 அன்று பிறப்பித்த தீர்ப்பினை எதிர்த்து, அரசு/நகராட்சி நிர்வாக இயக்குநர்/ஆலந்துார் நகராட்சி ஆணையாளர் ஆகியோர் சார்பாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய (Special Leave Petition) நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
நகராட்சி ஆணையர், ஆலந்துார் நகராட்சி.

<u>நகல்</u>

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) பிரிவு, சென்னை – 9.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**